2013 ஏப்ரல் 16]

தலைவர் அவர்களே, அது ஊராட்சிப் பகுதியாக இருப்பதனால், அந்தப் பகுதியில் நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்த இடம் இருக்கும் சூழ்நிலையில், ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றோ மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான கருத்துருவைப் பெற்று அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முனைப்பான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

232—

மேம்பாலம்

***7190—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டில் திருச்சிராப்பள்ளி–சென்னை நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மைலம் தொகுதி கூட்டேரிப்பட்டில் மேம்பாலம் அமைப்பதற்கு விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 *ஏப்ரல்* 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.*

திரு. கே.பி. நாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதங்களைத் தொட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பாரதம் போற்றுகின்ற பயம் அறியாத பாசத் தலைவியே, விலையில்லா பொருட்களை வழங்கி, வியக்க வைக்கும் தமிழகத்தின் விடியலே, தமிழக மக்களின் வாழ்வு மலர பாடுபடும் தமிழகத்தின் தாய் மலரே, படைப்பாற்றல் நிறைந்துள்ள தாயே, அம்மா! உங்களை பாரதம் அழைக்கின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற முறை நடந்த கூட்டத் தொடரில் சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலே புதியதாக உருவாக்கப்பட்டுள்ள அந்த மைலம் சட்டப் பேரவைத் தொகுதியின் மையப் பகுதியாக அமைந்துள்ள கூட்டேரிப்பட்டிலே இந்த மேம்பாலம் அமைப்பதற்கு ஆவன செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். அது எப்போது நடைபெறும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன், தாயே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 45, தமிழ்நாட்டின் தென் பகுதியையும், வட பகுதியையும் இணைக்கும் முக்கிய தேசிய நெடுஞ்சாலையாகும். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையக் கட்டுப்பாட்டில் இந்தச் சாலை 2009 ஆம் ஆண்டு நான்கு வழிப் பாதையாக மாற்றப்பட்டது. இந்தச் சாலையில் கிலோ மீட்டர் 133/4—ல் கூட்டேரிப்பட்டு என்ற இடத்தில் நான்கு முனை சந்திப்புச் சாலை உள்ளது. இடதுபுறம் மைலம்—பாண்டி என்ற மாநிலச் சாலையும், வலதுபுறம் வெள்ளிமேடுபேட்டை—மைலம் என்ற மாவட்ட முக்கியச் சாலையும் பிரிகின்றது.*

2013 ஏப்ரல் 16]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மேற்படி சாலை சந்திப்பில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அங்கே பல்லடுக்கு மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்றுவருகிறது. திட்ட அறிக்கை கிடைக்கப்பெற்றதும், உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

திரு. கே.பி. நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆவன செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

233—

ஆவின் பாலகக் கட்டடம்

***13301—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—